**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை** : **திரு. A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054, சுபகிருது வருடம் மாசி மாதம் 20-ம் நாள்
2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் நாள் சனிக்கிழமை.

**<u>அசல் வழக்கு எண். 174/ 2019</u>**
**(CNR.No: TNTH06-000277-2019)**

அருளானந்தம் **...வாதிகள்**

**/எதிர் /**

1. S. அவிலாராணி
2. J. சேவியர்
3. S. குழந்தைதெரஸ்
4. S. ஜோதி
5. M. சவரியார்
6. அனுமந்தன்பட்டி பேரூராட்சி
   அதன் நிர்வாக அதிகாரி அவர்கள் மூலம்.
7. உத்தமபாளையம் தமிழ்நாடு மின்சாரவாரியம்
   அதன் இளமின் பொறியாளர் அவர்கள் மூலம்,
8. உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்கள் மூலம்,
9. உத்தமபாளையம் சார்பதிவாளர் அவர்கள் மூலம்.

**... பிரதிவாதிகள்**

இவ்வழக்கு என் முன்பாக இன்று 04.03.2023-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4-ஆம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 5-ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. வேங்கையா அவர்கள் ஆஜராகியும், 1, 2, 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 21.10.2019-ஆம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி அழைக்கப்பட்டும் வருகையின்மையால் இன்று நீதிமன்றம் வழங்கிடும்:

## தீர்ப்புரை

தாவா 1வது இலக்க சொத்தானது வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கேட்டும், அதன் துணை பரிகாரமாக 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா 1வது இலக்க சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்ககேட்டும், வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 2வது இலக்க சொத்தில் தெற்கு பக்கம் கிழமேல் அடி 16 1/2 தென்வடல் 3 அடி 1 முதல் 4 பிரதிவாதிகளும், தாவா 2வது இலக்க சொத்தில் (வட கீழ்பக்கம் கிழமேல் அடி 6 1/2 தென்வடல் 8 அடி) 5 பிரதிவாதியின் செய்துள்ள ஆக்கிமிப்புகளை நீதிமன்ற உத்தரவின் மூலம் அகற்றி வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க கேட்டும், தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அல்லது அவரது வகை ஆட்களோ, ஏஜெனட்களோ 9ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் வேறு நபர்களுக்கு விற்பனையோ அல்லது வேறு எந்த வகையிலும் வில்லங்கமோ, இடையூறோ செய்யக்கூடாது என்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க கேட்டும், இவ் வழக்கின் செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலத்திவைக்க கேட்டும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி அழைத்தும் ஆஜரில்லை, அசல் வழக்கானது பட்டியலில் (Trial in List) போடப்பட்ட நிலையில் வாதி தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லை, எனவே வாதி அழைக்கப்பட்டும் ஆஜரில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்து உத்தவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

2023–ம் வருடம் மார்ச் மாதம் 04– ம் நாள் இத்தீர்புரை அவையறிய பகரப்பட்டது.

**/sd/ A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை : திரு. A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054, சுபகிருது வருடம் மாசி மாதம் 20–ம் நாள்
2023–ம் ஆண்டு மார்ச் மாதம் 04–ம் நாள் சனிக்கிழமை.

**<u>அசல் வழக்கு எண். 174/ 2019</u>**
**(CNR.No: TNTH06-000277-2019)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், 1 வது வார்டு, கதவு எண். 1–2–29A 2 என்ற முகவரியில் வசித்து வரும் லேட் மரிய அருள்பாக்கியம் பிள்ளை அவர்களின் குமாரர் கிறிஸ்துவ வயது சுமார் 72 உள்ள அருளானந்தம்.

**... வாதி**

**/எதிர்/**

1. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு 1 கருப்பையா கோனார் தெரு, கதவு எண்.1 – 1 – 8D2 என்ற முகவரியில் வசித்து வரும் J. சேவியர் அவர்களின் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 48 உள்ள அவிலா ராணி.

2. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு 1 கருப்பையா கோனார் தெரு, கதவு எண். 1–1–8D2 என்ற முகவரியில் வசித்து வரும் ஜேம்ஸ் அவர்களின் மகன் கிறிஸ்தவர் வயது சுமார் 54 உள்ள சேவியர்.

3. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு 2 கிறிஸ்தவர் வேளாளர் தெரு, கதவு எண். 2–1–14 என்ற முகவரியில் வசித்து வரும் P. சகாயம் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 45 குழந்தை தெரஸ்.

4. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு 1 கருப்பையா கோனார் தெரு, கதவு எண் 1 –1 –48 என்ற முகவரியில் வசித்து வரும் சேவியர் அவர்கள் மனைவி கிறிஸ்தவர் வயது சுமார் 37 உள்ள ஜோதி.

5. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம், வார்டு 2 கிறிஸ்தவர் வேளாளார் தெரு, கதவு எண்.2–1–15 என்ற முகவரியில் வசித்து வரும் மரியராஜ்பிள்ளை அவர்கள் மகன் கிறிஸ்தவர் வயது சுமார் 65 உள்ள சவரியார்.

6. தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டி கிராமம் அனுமந்தன்பட்டி பேரூராட்சி அதன் செயல் அலுவலர் அவர்கள் மூலம்.

7. தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் தமிழ்நாடு மின்சாரவாரியம் அதன் இளமின் பொறியாளர் அவர்கள் மூலம்.

8. தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் வட்டாட்சியர் அவர்கள் மூலம்.

9. தேனி மாவட்டம், உத்தமபாளையம் டவுன், உத்தமபாளையம் சார்பதிவாளர் அவர்கள் மூலம். **...பிரதிவாதிகள்**

தாவா 1வது இலக்க சொத்தானது வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கேட்டும், அதன் துணை பரிகாரமாக 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவா 1வது இலக்க சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்ககேட்டும், வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா 2வது இலக்க சொத்தில் தெற்கு பக்கம் கிழமேல் அடி 16 1/2 தென்வடல் 3 அடி 1 முதல் 4 பிரதிவாதிகளும், தாவா 2வது இலக்க சொத்தில் (வட கீழ்பக்கம் கிழமேல் அடி 6 1/2 தென்வடல் 8 அடி) 5 பிரதிவாதியின் செய்துள்ள ஆக்கிமிப்புகளை நீதிமன்ற உத்தரவின் மூலம் அகற்றி வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்க கேட்டும், தாவா சொத்தை பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளோ, அல்லது அவரது வகை ஆட்களோ, ஏஜெனட்களோ 9ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் வேறு நபர்களுக்கு விற்பனையோ அல்லது வேறு எந்த வகையிலும் வில்லங்கமோ, இடையூறோ செய்யக்கூடாது என்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க கேட்டும், இவ் வழக்கின் செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலத்திவைக்க கேட்டும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 18.09.2019. |
| வழக்கு மூலம் எழுந்த நாள் | – | 03.01.1968, 26.02.1973, 07.12.2015, 26.03.2018, 03.04.2018, 12.02.2018, 28.08.2018, 03.06.2019, ஆகிய தேதிகளில் உத்தமபாளையம் தாலுகா அனுமந்தன்பட்டி கிராமத்தில் உற்பத்தி. |
| தாவா மதிப்பு | – | ரூ. 43,945/– (32288+10657+1000) |
| நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | – | 1–வது பரிகாரம் நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 25(a) படி ரூ.967.00/–<br>2–வது பரிகாரம் நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 25(a) படி ரூ.320.00/–<br>3–வது பரிகாரம் நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டம் பிரிவு 27(c) படி ரூ.30.00/– ஆக மொத்தம் ரூ. 1317.00/– |

இவ்வழக்கு என் முன்பாக இன்று 04.03.2023–ம் தேதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. சத்தியமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4–ஆம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. ராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், 5–ஆம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. வேங்கையா அவர்கள் ஆஜராகியும், 1, 2, 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 21.10.2019–ஆம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி அழைக்கப்பட்டும் வருகையின்மையால் இன்று நீதிமன்றம் வழங்கிடும்:

## தீர்ப்பாணை

1. வாதியின் வருகையின்மையால் வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை

## சொத்துவிபரம்

**1.** பெரியகுளம் டி, உத்தமபாளையம் சப்டி, அனுமந்தன்பட்டி கிராமம் அனுமந்தன்பட்டி கிராம பழைய சர்வே எண். 416 புதிய சர்வே எண்.1117/11 வார்டு 1 கதவு எண். 1–2–29 மனைக்கு.

| | | |
|---|---|---|
| கிழக்கு | – | வீதி |
| தெற்கு | – | ஆசீர்வாதம் பிள்ளை வகையறா மனை |
| மேற்கு | – | ஞானப்பிரகாசம் பிள்ளை வகையறா மனை |
| வடக்கு | – | வாதி மனை |

இம்மாலில் கிழ மேல் அடி 16 1/2 தென்வடல் 18 1/2 அடி உள்ள மனையிடமும், இதில் அடங்கிய கூரை வீடு மேற்கு கதவு நிலை வகையறா அடக்கம் எஸ் சி எண் 216 மின்சார இணைப்பில் இருந்து நான்கில் ஒரு பங்கு பாத்தியமும் இம்மால்க்கு ஏற்பட்ட சகல மாமூல் பாத்தியங்களும் சேர்த்து சர்வ அடக்கம், மேற்படி சொத்து அனுமந்தன்பட்டி பேரூராட்சி எல்லைக்கு உட்பட்டது.

**2.** பெரியகுளம் டி, உத்தமபாளையம் சப்டி, அனுமந்தன்பட்டி கிராமம், அனுமந்தன்பட்டி கிராம பழைய சர்வே எண்.416 புதிய சர்வே எண்.1117/11 வார்டு கதவு எண். 1–2–29A2 மனைக்கு.

| | | |
|---|---|---|
| கிழக்கு | – | வீதி |
| தெற்கு | – | (1,2,3,4 பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பான) 1வது இலக்க சொத்து) |
| மேற்கு | – | ஞானப்பிரகாசம் பிள்ளை வகையறா மனை |
| வடக்கு | – | வாதி மனை |

இம்மாலில் வாதிக்கு பாத்தியபட்ட கிழமேல் 16 1/2 க்கு தென்வடல் 26 அடி அளவுள்ள சொத்தில் தெற்கு பக்கம் 1,2,3,4 பிரதிவாதிகள் கிழமேல் அடி 16 1/2 தென்வடல் 3 அடி ஆக்கிரமித்தும் கட்டியுள்ள கட்டிடம் தாவா.

**3.** வாதிக்கு பாத்திய பட்ட மேற்படி சொத்தில் வட கீழ்பக்கம் கிழமேல் அடி 6 1/2 தென்வடல் 8 அடி அளவில் 5 ம் பிரதிவாதி ஆக்கிரமித்து கட்டியுள்ள கோவில் தாவா.

## <u>செலவுத்தொகைப்பட்டியல்</u>

| | | | வாதி தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|---|---|---|
| 1 | நீதிமன்ற முத்திரைக்கட்டணம் | – | | |
| 2 | விண்ணப்பத்திற்கு | – | | |
| 3 | வக்காலத்து நாமாவுக்கு | – | | |
| 4 | கட்டளை சேர்ப்பிப்பதற்கு | – | | |
| 5 | வழக்கறிஞர் கட்டணம் (சீனியர்) | – | செலவுத்தொகைப் பற்றிய உத்தரவு ஏதும் இல்லை | |
| 6 | வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | – | | |
| 7 | பிளிடிங் சார்ஜ் | | | |
| | | மொத்தம் | -- | -- |

2023 ம் வருடம் மார்ச் மாதம் மாதம் 04–ம் நாள் எனது கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**/sd/ A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**